**நோர்வுட் பிரதேச சபை - 2023**
-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நோர்வுட் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நோர்வுட் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 கணக்கறிக்கை பூரணப்படுத்துவது தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா. 70,987 பெறுமதியான 02 கடன் பட்டோர் மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அத் தவறினை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்குகள் பிழையின்றி தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா. 499,978 பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்த ஒரு நிர்மாணச் செயற்றிட்டத்திற்காக ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா. 99,996 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதும், அது ரூபா. 499,978 என கணக்கிடப்பட்டிருந்தமை காரணமாக ரூபா. 399,982 கடன்பட்டோர் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2024 இற்கான நிதிக்கூற்று தயாரிக்கும் பொழுது அதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று ஊழியர் ஒருவரிடமிருந்து கடன் நிலுவையாக ரூபா. 32,850 தொகை பெறப்பட வேண்டியிருந்த போதும், அது ரூபா. 185,460 என நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தமை காரணமாக ரூபா. 152,610 கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது அதனை சீர் செய்வதாக | கணக்குகள் பிழையின்றி தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பூலியாவத்தை மற்றும் பகவன்தலாவை கடைகளை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா. 44,933,882 மூலதனமாக் கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தவறினை ஏற்றுக்கொள்வதுடன் 2024 இற்கான நிதிக்கூற்று தயாரிக்கும் பொழுது அதனை சீர் செய்வதாக | சொத்துக்களை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வடிண்டின் திசம்பர் 31 அன்று மீதி கணக்கெடுப்பின் பொது ரூபா. 4,786,836 ஆன மீதியினை உறுதிப்படுத்துவதற்கான பேரேட்டுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சீர் செய்வதாக. | பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | 371(ஆ) | 2021 திசம்பர் 14 செலுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்பான முற்பணக் கொடுப்பனவு ரூபா. 99,996 மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை மீள்நிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முற்பணக் கொடுப்பனவினை மீள் நிரப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| i. | 1988 மே 17 திகதியிடப்பட்ட 1988/22 இலக்க சுற்றறிக்கை | வீதவரி மற்றும் வரி அறவிடலுக்கான சொத்துக்களின் மதிப்பீடு 05 வருடங்களுக்கொரு முறையேனும் மேற்கொள்ளப்பட | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதனை ஆவணப்படுத்தி 2025 | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டம். |

| | | |
|---|---|---|
| | வேண்டியிருந்த போதும், பிரதேச சபை 2018 ஆண்டிற்கான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வுத் தினம் வரை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை | இல் செயற்படுத்த முடியும் என்பதாக |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,920,319 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,687,049 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| (i) | வீதவரியும் வரியும் | 3,580,000 | 3,531,098 | 3,534,717 | 286,181 | 5,320,000 | 3,102,133 | 3,657,534 | 289,800 |
| (ii) | வாடகை | 11,988,450 | 10,265,599 | 9,856,210 | 2,456,245 | 11,543,000 | 8,397,557 | 8,282,755 | 2,046,856 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,900,000 | 3,482,364 | 3,482,364 | - | 3,961,000 | 1,997,048 | 1,664,544 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,000,000 | 16,558,265 | 8,859,411 | 15,939,990 | 69,036,460 | 6,177,047 | 45,652,222 | 8,241,136 |
| | மொத்தம் | 27,468,450 | 33,837,326 | 25,732,702 | 18,682,416 | 89,860,460 | 19,673,785 | 59,257,056 | 10,577,792 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை | | |
| | அம்பகமுவ மற்றும் பொகவந்தலாவை பிரதேசங்களில் அமைந்துள்ள 02 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்தமாக ரூபா. 1,958,876 வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக வழக்கு தொடருவதற்குத் தீர்மாணிக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | **வேறு வருமானங்கள்** | | |
| i. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154(1) பிரிவின் பிரகாரம் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 59 காணிகளிலிருந்து 01 வீத வாடகையான ரூபா. 1,517,803 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு தேவையான சட்டவாக்கம் மேற்கொள்ளப்படவில்லை யென்பதாக | சட்டத்தின் விதிமுறைகளுக்கமைவ ாக செயற்படல் வேண்டும். |
| ii. | சுற்றுலா சபையின் மூலமாக பெற்றுக்கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் சுற்றுலா அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 05 ஹோட்டல்களிலிருந்து வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக வருமானத்தின் 01 வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையில் பல வருட காலமாக வருமான பரிசோதகர் ஒருவர் காணப்படாமை காரணமாக இது தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு முடியாமல் போயுள்ளதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 703,489 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 15,236,501 ஆகவிருந்தது. | நிலுவைகளை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மீதமுள்ள நிலுவை வருமானத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைச் சட்டத்தின் 79 முதல் 84 வரையிலான பிரிவுகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசதினுள் மீளாய்வாண்டினுள் சபையின் மூலம் வடிகாலமைப்பு சம்பந்தமான எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. | தற்பொழுது சபையில் போதிய நிதி வசதி காணப்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக | சட்டத்தின் மூலம் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைச் சட்டத்தின் 93 முதல் 95 வரையிலான பிரிவுகளின் பிரகாரம் மலப் போக்குவரத்து மற்றும் கழிவகற்றலுக்காக களி வாகன சேவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது சபையில் போதிய நிதி வசதி காணப்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக | சட்டத்தின் மூலம் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 27இற்கு அமைவாக சபைக்குச் சொந்தமான பாதைகள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது சபையில் போதிய நிதி வசதி காணப்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக | சட்டத்தின் மூலம் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 108 இற்கு அமைவாக செயற்பட்டு பொது மக்களுக்காக வினியோகிக்கப்படும் நீரினை சுத்திகரிக்கும் செயன்முறையினை மேற் கொள்ளாது குடிநீர் வினியோகம் செய்யப்பட்டிருந்தது. | தற்பொழுது சபையில் போதிய நிதி வசதி காணப்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக | சட்டத்தின் மூலம் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 49(அ) இற்கு அமைவாக 25 அடி வீதிரேகை எல்லை மற்றும் 2008 திசம்பர் 01 திகதிய 2008 இன் 40ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 42(2)(1)(அ) மற்றும் (ஆ) ஆகியவற்றின் பிரகாரம் பிரதான வீதியின் 50 அடி வீதிரேகை எல்லையினுள் அமைந்துள்ள 09 வரைபடங்களுடன் தொடர்பான கட்டட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் பிரதான வீதி 50 அடி வீதிரேகை எல்லையினுள் அமைந்துள்ள வரைபடங்களுக்கான கட்டட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாதென | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 49(அ) இற்கு அமைவாக பிரதேச சபை பாதையொன்றில் கட்டடங்கள் குறைந்த எல்லையினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 07 கட்டடங்களின் நட்டஈடு வழங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் பரிந்துரையும் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சட்டத்தின் விதிமுறைகளுக்கமைவாக செயற்படுவதாக | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) மற்றும் 139(2) பிரிவுகளுக்கமைவாக 2018ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் ஜுன் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் அனுமதிக்கப்பட்ட 195 கட்டட வரைபடங்கள் தொடர்பில் பின்னூட்டல் செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் நடைபெறாத வகையில் செயற்படுவதாக | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 24 காணிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | காணி மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதென | மதிப்பீடு செய்து கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான பகவன்தலாவை மாடறுப்பு நிலையம் அமைந்துள்ள காணியை, அதற்கு அருகில் உள்ள வீட்டினர் சட்டவிரோத அடிப்படையில் பயன்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டது. | காணியின் உரிமை தொடர்பில் சர்ச்சைக்குரிய நிலைமை உருவாகியுள்ள அதேவேளை, சட்டவிரோத குடியேற்றம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாக | காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 94,759 பெறுமதியான 19 கொம்போஸ்ட் கொள்கலன்கள் பயன்படுத்தப்படாது சபை வளாகத்தினுள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் பங்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | எதிர்பார்க்கப்பட்ட தேவைக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | ஹொன்சி நீர் பம்பகம், குலோரீன் அறை, நீர்த் தாங்கியின் கம்பிவலை மறைப்பு போதுமானதாக இல்லாததன் காரணமாக நீரில் அழுக்குகள் கலப்பதும், குலோரீன் அறை பயன்பாட்டில் இல்லாமை மற்றும் முறையானதொரு திட்டம் இன்றி நீருக்கு குலோரீன் சேர்க்கப்படுதல் ஆகிய காரணங்களால் நீர் சுத்திகரிப்பானது போதியளவு இடம்பெற்றிருக்கவில்லை. | இந் நீரினை களி வாகனங்கள் மூலம் அகற்றி தாங்கிகளை பரிசீலனை செய்து மீண்டும் அவற்றை பழுதுபார்ப்பதற்கோ அல்லது நிர்மாணிப்பதற்கோ நடவடிக்கை எடுப்பதாக. | பொது மக்களுக்கு சுத்தமான குடிநீரினை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நோர்வுட் நூலகத்தின் கழிவறை சரிந்து விழும் நிலையில் இருந்த போதும் அது திருத்தம் செய்யப்படாதிருந்ததுடன், நோர்வுட் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள காணி பிரயோசனமான முறையில் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதனை உடைத்து அகற்றிவிட்டு மீள் நிர்மாணம் செய்வதாகவும் நோர்வுட் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள காணியில் வார சந்தையொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நோர்வுட் பொதுக் கழிவறை, ஆயர்வேத நிலையத்தில் அமைந்துள்ள கழிவறை மற்றும் பகவன்தலாவை பேரூந்து தரிப்பிட கழிவறை ஆகியவற்றின் குழிகளில் விரைவாக நீர் நிரம்புவதன் காரணமாக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் கழிவறைகளை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பொருத்தமான திருத்தங்களை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு உட்படுத்தல் வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களின் உரிமை மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி வரை சபைக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அம்பகமுவை பிரதேச சபையின் மூலம் வழங்கப்பட்ட பழுதடைந்த நிலையில் உள்ள 02 டேலர்கள் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக. | உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கான அனுமதிக்கப்பட்ட பணிக்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 96 ஆகவிருந்ததுடன் 18 பதவிகளுக்காக மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று 73 வெற்றிடங்கள் காணப்பட்ட அதேவேளை கள சிற்றூழியர், சுகாதார சிற்றூழியர், வாயிற் | 46 வெற்றிடங்களுக்கான ஊழியர்களை பணிக்கமர்த்துவதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப்பெறாததன் காரணமாக இதுவரை இது சாத்தியமாகவில்லையென்பதாக | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |

காப்பாளர்கள், மின் தொழில் நுட்பவியலாளர்கள், தகனவாலை இயக்குனர், அலுவலக உதவியாளர்கள், தகனவாலை உதவியாளர்கள் ஆகிய அனுமதிக்கப்பட்ட 46 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டமை, பொது சுகாதாரம், கழிவு முகாமைத்துவம் ஆகிய சபையின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தடையாக இருந்தன.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ஏற்பட்டிருந்த ரூபா. 92,007 பெறுமதியான நூலக புத்தகங்களின் குறைபாடு தொடர்பாக நி.கோ. 104இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்குப் பொருத்தமற்ற நூல்கள் நூலகக் கட்டுப்பாட்டுப் புத்தகத்திலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் மூலம் தேவையான நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கோவையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |